## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



### ஒன்றிய அரசின்

## திறன் மேம்பாட்டுத் திட்டங்களால் தமிழ்நாடு அடைந்த பயன் என்ன?

### மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



**புதுடெல்லி,மார்ச் 19-**

**ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்த கேள்விகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக கேட்டார்.**

“ஒன்றிய அரசின் திறன் இந்தியா மிஷன் என்ற இயக்கத்தில் வரும் திட்டங்களின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மாநில வாரியாக என்ன? குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக, குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் எவ்வளவு? இத்தகைய திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்குப் பிறகு வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் என்ன?

பிரவாசி கௌஷல் விகாஸ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தமிழ்நாட்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட வாரியாக, குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் எவ்வளவு?” ஆகிய கேள்விகளை கேட்டிருந்தார் கனிமொழி கருணாநிதி.

இக்கேள்விகளுக்கு திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் துறையின் இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில் வருமாறு:

“ஒன்றிய அரசின், ‘திறன் இந்தியா மிஷன்’ என்ற திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் (MSDE), திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும், மறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும், உயர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வ்ழங்குகிறது.

இதற்காக பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் சிக்ஷான் சன்ஸ்தான் (JSS), தேசிய தொழில்பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (NAPS) மற்றும் தொழில்துறைபயிற்சிநிறுவனங்கள் (ITIs) மூலம் கைவினைஞர் பயிற்சி திட்டம் (CTS) என பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள சமூகத்தின் அனைத்து பிரிவு களுக்கும். இந்த திட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தியாவின் இளைஞர்கள் எதிர்காலத்தில் தொழில்துறைக்கு ஏற்ற திறன்களுடன் தயாராவதை நோக்கமாகக் கொண்டு இப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டம் தொடங்கப்பட்ட 2015 முதல் கடந்த 2024 வரை தமிழ்நாட்டில் 8 லட்சத்து 68 ஆயிரத்து 443 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 9 ஆயிரத்து 870 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

ஜன் சிக்ஷான் சன்ஸ்தான் திட்டத்தின் கீழ் 2018 முதல் 2025 பிப்ரவரி வரை தமிழ்நாட்டில் 87 ஆயிரத்து 449 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எவருமில்லை.

தேசிய தொழில் பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் 201819 முதல் பிப்ரவரி 2025 வரை தமிழ்நாட்டில் 3 லட்சத்து 55 ஆயிரத்து 439 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் 1157 பேர் தூத்துக்குடி மாவட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

தொழில் பயிற்சி நிறுவனங்கள் (ITI) வழியாக தமிழ்நாட்டில் 2 லட்சத்து 10 ஆயிரத்து 15 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 17 பேர் பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் துறையின் திட்டங்களில், 201516 முதல் 2021 22 வரை செயல்படுத்தப்பட்ட பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் முதல் மூன்று பயிற்சித் திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்புகள் பெற்றவர்களின் எண்ணிக்கை கண்டறியப்பட்டது.

அதன்படி நாடு முழுதும் 24 லட்சத்து 43 ஆயிரத்து 672 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். அதேபோல தமிழ்நாட்டில் இந்த பயிற்சிகளின் மூலமாக 1 லட்சத்து 72 ஆயிரத்து 336 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 182 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

PMKVY 4.0 இன் கீழ் பயிற்சி பெறவர்கள் மாறுபட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் பாதையை தேர்ந்தெடுப்பதற்கு இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் திறன் மேம்பாட்டுத் திட்டமான பிரவாசி கௌஷல் விகாஸ் யோஜனா (PKVY), வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாய்ப்புகளை எளிதாக்குவதற்காக, சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2018 இல் தொடங்கப்பட்டதிலிருந்து பிரவாசி கௌஷல் விகாஸ் யோஜனா (PKVY) இன் கீழ், வெளிநாடு செல்வதற்கு முந்தைய ஓரியண்டேஷன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி நாடு முழுதும் 1 லட்சத்து 82 ஆயிரத்து 381 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்:. இவர்களில் தமிழ்நாட்டில் இருந்து 2 ஆயிரத்து 328 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்”.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

### பல்வேறு தொழிற்சங்கங்களின் கோரிக்கையான

## குறைந்தபட்ச தொழிலாளர் ஓய்வூதியம் ரூ.9000 ஆக எப்போது முதல் உயரும்?

### மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி



**புதுடெல்லி,மார்ச் 19-**

**தனியார், மத்திய, மாநில அரசுகளின் நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெறும் அலுவலர்கள், தொழிலாளர்கள், மேலாளர்கள், இயக்குனர்கள், தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து நிலைப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால், இந்த ஓய்வூதியத் தொகை வெறும் ஆயிரம் ரூபாய் என மிகமிகக் குறைந்த அளவில்தான் பல ஆண்டுகள் பணிபுரிந்த பிறகும் லட்சக்கணக்கான பேர் பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக தொழிலாளர் சங்கங்கள் தரப்பில் வைக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில் இந்தப் பிரச்சனை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பேசியதாவது:

“தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995இன் கீழ் ஓய்வுபெற்ற தொழிலாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் குறைந்தபட்சம் ரூ.9000 ஆக(ஒன்பதினாயிரம் ரூபாயாக) உயர்த்தப்பட வேண்டும் என பாரதீய மஜ்தூர் சங்கம் (பா.ஜ.க.வின் தொழிற்சங்கம்) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளிட மிருந்து ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதா? அப்படி என்றால் அதன் விவரங்கள் என்ன? எப்போது முதல் குறைந்தபட்ச ஓய்வூதியம் 9,000 ரூபாயாக அதிகரிக்கப்படும்?” என்று நேற்று முன்தினம் (17.3.2025) எழுப்பிய தனது கேள்வியில் வினவியிருந்தார்.

இதற்கு அமைச்சர் ஷோபா கராந்தலாஜே அளித்த பதில் வருமாறு:

ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக இணை அமைச்சர் திருமதி ஷோபா கராந்த்லாஜே அவர்கள், தொழிலாளர் ஓய்வூதியம் உயர்வு தொடர்பான இந்தக் கேள்விக்கு எழுத்துப்பூர்வ பதிலை மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார். தொழிலாளர் ஓய்வூதிய திட்டம் 1995 என்பது “வரையறுக்கப்பட்ட பங்களிப்பு, வரையறுக்கப்பட்ட பலன்” என்ற கொள்கை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் சம்பளத்தில் 8.33 சதவிகிதம் அளவுக்கு நிறுவனமும் 1.16 சதவிகிதம் அளவுக்கு அரசும் ஓய்வூதிய வைப்பு நிதியத்துக்கு தங்கள் பங்களிப்பாகச் செலுத்துகின்றன. இப்படி உருவாக்கப்பட்டுள்ள ஓய்வூதிய நிதியத்தில் சேர்ந்துள்ள நிதியை ஆதாரமாகக் கொண்டு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணிநிறைவு அடையும் போது எவ்வளவு சம்பளம் வாங்கினாலும் ரூ.15,000/ மட்டுமே ஓய்வூதியக் கணக்கீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஓய்வூதியத் தொகை நிர்ண யிக்கப்படுகிறது.

2014 முதல் குறைந்தபட்சம் ஓய்வூதியம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. 202324 க்கான கணக்கெடுப்பின்படி தற்சமயம், 47 லட்சம் ஓய்வூதியர்கள் ரூ.9,000க்கும் குறைவான தொகையைத்தான் மாதந்தோறும் ஓய்வூதியமாகப் பெற்று வருகிறார்கள்.

இவ்வாறு தனது பதிலில் தொழிலாளர் துறை இணை அமைச்சர் தெரிவித்தார்.

**பா.ஜ.க. தொழிற்சங்க கோரிக்கை ஏற்கப்படவில்லை!**

நாட்டின் தொழில், வணிகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக ஆயிரக்கணக்கான தொழிலகங்களிலும், நிறுவனங்களிலும் பல ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெற்ற ஊழியர்கள் வெறும் 1000 ரூபாய் அளவில் ஓய்வூதியம் பெறும் அவல நிலையில் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9,000 அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என தொழிலாளர் அமைப்புகள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றன.

ஒன்றிய அரசின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பா.ஜ.கவின் தொழிற்சங்கமான பாரதீய மஜ்தூர் சங் (பி.எம்.எஸ்) அமைப்பும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சில மாதங்கள் முன் ஒன்றிய தொழிலாளர் அமைச்சரிடம் நேரடியாக மனு அளித்தது.

பி.எம்.எஸ் குறைந்தபட்ச ஓய்வூதிய உயர்வு குறித்து கோரிக்கை வைத்துள்ளதை தனது பதிலில் அமைச்சர் ஒத்துக் கொண்டுள்ளார்.

ஆனால், கோரிக்கையை அரசு பரிசீலிக்கிறதா அல்லது ஏற்கிறதா என எந்தவொரு தகவலும் அமைச்சர் ஷோபா கராந்த்லாஜே மக்களவையில் அளித்த தனது பதிலில் அவர் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஓய்வூதியம் தொடர்பாக சென்ற நான்கு ஆண்டுகளாக தி.மு.க. பொருளாளரும், மக்களவை தி.மு.க. குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் தொடர்ந்து பல முறை மக்களவையில் விவா தங்களிலும் வினா வாயிலாகவும் எழுப்பி வலியுறுத்தி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மக்கள் மீது இந்தித் திணிப்பு செய்ய ரயில்வே துறையைப் பயன்படுத்துவது

## இந்திய இறையாண்மை - ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும்!

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எச்சரிக்கை!

**புதுடெல்லி, மார்ச் 19-**

**“மக்கள் மீது இந்தித் திணிப்பு செய்ய ரயில்வே துறையைப் பயன்படுத்துவது இந்திய ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்குத் தீங்கு விளைவிக்கும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.**

இது குறித்து மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் பேசியதாவது:

இந்திய ரயில்வே,ஒரு தேசிய போக்குவரத்து அமைப்பு, இந்தியாவின் பல்வேறு பகுதிகளை இணைக்கிறது மற்றும் மிகப்பெரிய ரயில் நெட்வொர்க்குகளுக்கு உலகில் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.

ரயில்வே அமைப்பு இந்தியாவின் மிகப்பெரிய வருமான ஆதாரங்களில் ஒன்றாகும், மேலும் இது கோடிக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்வில் முக்கியபங்குவகிக்கிறது.

1853 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதி இந்தியாவின் முதல் பயணிகள் ரயில் இயக்கப்பட்டதிலிருந்து,இந்திய ரயில்வே நீண்ட பாதையை கடந்து வந்துள்ளது. இந்திய ரயில்வே ஆசியாவின் மிகப்பெரிய ரயில் வலையமைப்பாகும், இதில் 8500 க்கும் மேற்பட்டநிலையங்கள் மற்றும் 121,407 கி. மீ. ரயில் தடங்கள் உள்ளன.

இது தினமும் சுமார் 11,000 ரயில்களை இயக்குகிறது மற்றும் 1.3 மில்லியன் ஊழியர்களுடன் உலகின் 8வது மிகப்பெரிய நிறுவனமாக உள்ளது.

**அரக்கோணத்தில் ரயில்வே முனையம் அமைத்திடுக!**

எனது அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் அரக்கோணம் ரயில்வே ஜங்சன் தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா மற்றும் வடமாநில மக்களுக்கான மிக முக்கியமான ரயில்வே ஜங்சன் ஆகும்.

எனவே சென்னை சென்ட்ரல், எக்மோர் ரயில் முனையங்களைப் போல அரக்கோணத்திலும் ஓர் இரயில் முனையம் அமைத்திட வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கிறேன்.

அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் உள்ள சோளிங்கர் மிகவும் பிரசித்தி பெற்ற புராதன கோயில்கள் கொண்ட ஊராகும். இங்கே தினந்தோறும் வந்து செல்லும் பயணிகளுக்காக சோளிங்கர் ரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ரயில் விபத்துகளை தடுத்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!**

2023-24 ஆம் ஆண்டில் 40 ரயில் விபத்துகளில் குறைந்தது 313 பேர் இறந்துள்ளனர், மேலும் முந்தைய பத்து ஆண்டுகளில் 638 ரயில் விபத்துகளில் 748 பேர் இறந்துள்ளனர்.இப்படி தொடர் விபத்துகள் நடந்தாலும், அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் விபத்துகளும்,



உயிரிழப்புகளும் தொடர்ந்து அதிகரித்து வருவதையேபுள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதை கவனத்தில் கொண்டு மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**மின்சார ரயில்களில் கழிப்பறை வசதி செய்க!**

சென்னை சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையம், தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்தும் இயக்கப்படும் மின்சார ரயில்களில் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக பயணப்படும் தொடர் வண்டிகளில் கழிப்பறை வசதிகள் கொண்ட பெட்டிகள் இருக்க வேண்டும் என்பது பொது மக்களின் நீண்ட கால கோரிக்கை.ரயில்வே நிர்வாகம் இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ரயில்வேயின் உட்கட்டமைப்புகளை நவீனமாக்கி மேம்படுத்த ஒரு ரூபாய் முதலீடு செய்தால் ஒன்றிய அரசுக்கு ஐந்து ரூபாய் வருவாய் வரும்.

எனவே ரயில்வே துறை உட்கட்டமைப்பு வசதிகள் நவீனமாக்கி மேம்படுத்த ஒன்றிய அரசு சுணக்கம் காட்டாமல் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**பழுதடைந்த பாலங்களை சீர்செய்க!**

ஆங்கிலேயர் காலத்தில் பல முக்கியமான பொது கட்டிடங்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்கியது. அவற்றில் ரயில்வே பாலங்கள் முக்கியமான இடம் பெறுகின்றன.

இந்த பாலங்கள், நமது நாட்டின் போக்குவரத்து மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தன. ஆனால், காலத்தை நம் எதிர்காலத்திற்கு அமைப்பதற்கான பெருந்திறனைக் கொண்ட நம் காலத்தில், இவை சில இடங்களில் பழுதடைந்துள்ளன சீரமைப்பு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாலங்கள் பல இடங்களில் பழுதடைந்துள்ளன. மழை, வெப்பம் மற்றும் காலத்தினால் அவை சிதறும் அபாயம் உள்ளது. இது பொதுமக்களின் பாதுகாப்புக்கு மிரட்டலாக இருக்கக்கூடும்.

புதிய பாலங்கள் மற்றும் சரியான சீரமைப்புகள் பொதுமக்களின் பயணத்தை மிக எளிதாக்கும். சிறந்த போக்குவரத்து வசதிகள் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**மிகக் கொடுமையான மொழிப் பிரச்சினை!**

ரயில்வே துறை சந்திக்கும் மிகக் கொடுமையான ஒரு பிரச்சினை மொழிப்பிரச்சினை. இந்தியா பல மொழிகள் பேசப்படும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் உன்னத நாடு. இரயில்வே நிர்வாகம் தமிழ் நாட்டில் ஸ்டேசன் மாஸ்டர், டிக்கெட் புக்கிங் அலுவலர், இதர அலுவலர்களை நியமிக்கும் போது வெறும் இந்தி மட்டுமே எழுதப் பேசத் தெரிந்தவர்களை நியமிப்பது ஏற்புடையதாகாது.

ரயில்வே நிர்வாகத்தின் செயல்பாடுகள் மிகவும் மந்தமாகி பொது மக்கள் விரும்பத்தகாத வகையில் மாறி உள்ளது. இந்நிலை ஏறக்குறைய அனைத்து மொழிவாரி மாநிலங்களிலும் உள்ளது என்பதே உண்மை.

தமிழ் நாட்டில் நியமிக்கும் ஊழியர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இதே போல் தெலங்கானா ஆந்திராவில் தெலுங்கு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

கேரளாவில் மலையாளம் மகாராஷ்டிராவில் மராத்தி ஒடிசாவில் ஒடியா, மேற்கு வங்கத்தில் பெங்காலி தெரிந்தவர்களை ரயில்வே நிர்வாகம் நியமிக்க வேண்டும். இதே கருத்தை அந்தந்த மாநிலத்தை சேர்ந்த எம்.பிக்கள் வலியுறுத்துவார்கள்.

மேலும் ஒன்றிய அரசு மக்கள் மீது இந்தித் திணிப்பு செய்ய ரயில்வே துறையை ஆயுதமாக பயன்படுத்துவது இந்திய இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு தீங்கு விளைவிக்கும். இந்த வெகுஜன மக்கள் விரோதப் போக்கை ரயில்வே துறை உடனடியாக கைவிட வேண்டும்.

இரயில் துறை கேட்கவே வேண்டாம் .பெரும்பாலான தமிழ் நாட்டில் உள்ள ரயில் நிலையங்களில் தமிழ் தெரியாத வட இந்தியர் நுழைந்து உள்ளனர். பயண சீட்டு வழங்கும் போது சண்டை சச்சரவு வந்தது. சிக்னலில் வேலை செய்த ஒரு வடநாட்டு நபர் மொழிபுரியாமல் இரண்டு ரயில்களை ஒரே நேரத்தில் எதிர் எதிராக அனுப்பி விட்டார். நல்ல வேலை உள்ளூர அதிகாரி கவனமாக இருந்து ரயிலை நிறுத்தி மக்களை காப்பாற்றினார்.

வட மாநிலங்களில் மட்டுமல்ல இங்கு தமிழ்நாட்டிலும் தமிழர்கள் பணியமர்த்தப்படுவதில்லை. ஆயிரம் காலியிடங்கள் ரயில்வேயில் நெய்வேலியில் இருக்கிறதென்றால் 20 பேர் கூட அதில் தமிழர் இல்லை. சோதனைக்கூட ஊழியர்கள் எல்லாம் தெரிவிக்கிறார்கள் பூராவும் வட இந்திய இந்தி பேசுபவர்களாக குவிந்து கிடக்கிறார்கள்.

**இருமொழிக் கொள்கை: சாதித்த விஞ்ஞானிகள்!**

இருமொழி கொள்கை பயின்று சாதித்த தமிழக விஞ்ஞானிகள் :

அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம்,

இந்தியாவின் நிலவு மனிதன் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை,

இந்திய வான்வெளி ஆராய்ச்சி நிலைய முன்னாள் தலைவர் டாக்டர் சிவன்,

இந்திய ஏவுகணை ஆராய்ச்சி நிறுவன முன்னாள் தலைவர் டாக்டர் சிவதாணுப்பிள்ளை,

பயோகெமிஸ்ட்ரி ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு வென்ற டாக்டர் வெங்கிராமகிருஷ்ணன் இவான்வெளி ரூ ராக்கெட் விஞ்ஞானி பி.எஸ். வீரராகவன்,

சந்திராயன் 3 திட்ட இயக்குனர் டாக்டர் வீரமுத்து வேல்

இன்னும் எத்தனையோ சாதனையாளர்கள் தமிழ் நாட்டில் இருமொழிக் கொள்கையில் படித்து முன்னேறியவர்கள் தான். ஆகவே மாநிலங்களில் வாழும் மக்கள் மீதான இந்தித் திணிப்பு என்பது தேவையில்லாத வேலை.

இவ்வாறு டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் பேசினார்.